செ.வெ.எண்: 427/2020 நாள்: 05.11.2020

**திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில் ரூ.2.05 கோடி மதிப்பில் அலுவலகக் கட்டடங்கள் / வணிக வளாகங்கள் திறந்து வைத்து 16,960 பயனாளிகளுக்கு ரூ.121.35 கோடி மதிப்பிலான கடனுதவிகளை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ வழங்கினர்...**

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க அலுவலக வளாகத்தில், கூட்டுறவுத் துறை சார்பாக இன்று (05.11.2020) நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ரூ.2.05 கோடி மதிப்பிலான புதிய அலுவலக கட்டடங்கள் மற்றும் வணிக வளாகங்கள் திறந்து வைத்து, 16,960 பயனாளிகளுக்கு ரூ.121.35 கோடி மதிப்பிலான கடனுதவிகளை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத் தலைவர் திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. பெருமாள் நகர் கே. ராஜன், கூட்டுறவுத் துறையின் சிறப்புப்பணி அலுவலர் முனைவர் க. ராஜேந்திரன், கூடுதல் பதிவாளர்கள் திரு. ம. அந்தோணிசாமி ஜான் பீட்டர், திரு. கு. ரவிக்குமார், திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் திரு. கே. ராஜ்குமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் திருமதி. காமாட்சி, கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், நிர்வாகிகள், கூட்டுறவாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில், கூட்டுறவுத்துறையின் சார்பில் 15,010 விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக ரூ.88.56 கோடியும், மகளிருக்கு மகளிர் சுய உதவிக் குழுக் கடனாக 404 பேருக்கு ரூ.18.56 கோடியும், சிறு வணிகக் கடனாக 287 பேருக்கு ரூ.87.00 இலட்சமும், மத்திய காலக் கடனாக 304 பேருக்கு ரூ.1.87 கோடியும், மத்திய காலக் கடனாக (டிராக்டர்) 3 நபர்களுக்கு ரூ.15.00 இலட்சமும், மாற்றுத்திறனாளி கடனாக 116 நபர்களுக்கு ரூ.47.00 இலட்சமும், என மொத்தம் 16,960 பயனாளிகளுக்கு ரூ.121.35 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் விழாவில் பேசியதாவது 'மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக உயர்த்திட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை விரைவாக எடுத்து நம் மாநிலத்திற்குள் நோய் பரவலை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளார். ஊரடங்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏழை, எளிய நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில், முதல்கட்டமாக, மாநிலம் முழுவதும் அரிசிபெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1000/-மும், அதனைத் தொடர்ந்து, முழு ஊரடங்கு நீட்டிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் மதுரை மாவட்டங்களில் சில பகுதிகளில் உள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டாம் கட்டமாக தலா ரூ.1000/-மும் வழங்கினார். மேலும், ஏப்ரல் 2020 முதல் ஜூலை 2020 வரையிலான ஊரடங்கு காலத்தில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசி, பருப்பு, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகியவற்றை விலையில்லாமல் வழங்கினார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டு மகளிர் பொருளாதார மேம்பாடடைய வழிவகுக்கப்பட்டது. அதுமட்டுமன்றி அம்மா அவர்களின் ஆட்சியில் கிராமப்புற பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவே விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டம்

செயல்படுத்தப்பட்டது. பெண்களின் சிரமத்தினை குறைத்திட, விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறிகள், வழங்கப்பட்டது. மாணவர்களின் நலன் கருதி, விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள், மிதிவண்டிகள், சீருடைகள், காலணிகள் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிற்கே வழிகாட்டியாக மருத்துவப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கி வரலாற்று சாதனையை படைத்துள்ளார்.

தமிழக கூட்டுறவுத்துறையும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் புதுப்பொலிவு பெற்று, தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில அளவில் கூட்டுறவுத் துறையின் மூலம் 2011 முதல் 22.10.2020 வரை 101,75,629 விவசாயிகளுக்கு ரூ.56,541.04 கோடியும், நடப்பாண்டில் 22.10.2020 வரை 6,17,241 விவசாயிகளுக்கு ரூ.4,762 கோடியும் வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மண்டலத்தில், 7,73,066 விவசாயிகளுக்கு ரூ.3,506 கோடி பயிர்க் கடனும், நடப்பாண்டில் 22.10.2020 வரை 53,079 விவசாயிகளுக்கு ரூ.313 கோடி வட்டியில்லா விவசாயக் கடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழக அளவில் பயிர்காப்பீடு இழப்பீடாக 15.10.2020 வரை 49,62,760 விவசாயிகளுக்கு, ரூ.8,915 கோடியும், இதில் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக 24,87,447 விவசாயிகளுக்கு ரூ.5,527 கோடியும், குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில், 31.10.2020 வரை 1,27,640 விவசாயிகளுக்கு ரூ.129 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கூட்டுறவுத்துறையின் மூலம் 5,17,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4,044 கிடங்குகள் ரூ.533.78 கோடி மதிப்பில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மாற்றுத்திறனாளிகள் கடனாக, தமிழகம் முழுவதும் 2011 முதல் 30.09.2020 வரை 65,924 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.274 கோடியும், திருவண்ணாமலை மாவட்டத்தில், 3,649 நபர்களுக்கு ரூ.13 கோடியும், நகைக் கடனாக, தமிழகம் முழுவதும் 6,43,30,433 நபர்களுக்கு ரூ.2,54,311 கோடியும், திருவண்ணாமலை மாவட்டத்தில், 17,33,307 நபர்களுக்கு ரூ. 6,086 கோடியும், தானிய ஈட்டுக் கடனாக தமிழகம் முழுவதும் 2,10,719 நபர்களுக்கு ரூ.2,845 கோடியும், இதில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 13,074 நபர்களுக்கு ரூ.72 கோடியும், தமிழகம் முழுவதும் சிறுவணிகக் கடனாக 16,30,866 நபர்களுக்கு ரூ.2,123 கோடியும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 39,923 நபர்களுக்கு ரூ.60 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. சிறுவணிகக் கடன் 10.09.2019 முதல் ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு 30.09.2020 வரை மாநில அளவில் 55,547 நபர்களுக்கு ரூ.165 கோடியும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 31.10.2020 வரை 1,907 நபர்களுக்கு ரூ.6 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 7 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன இதில் 103 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். கூட்டுறவுத் துறையின் மூலம் 2011-2012 முதல் 30.09.2020 வரை 4,17,073 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.7,517 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், திருவண்ணாமலை மாவட்டத்தில் 6,61,128 உறுப்பினர்களுக்கு (கோவிட்-19 கடன் உட்பட) ரூ.846 கோடி வழங்கப்பட்டுள்ளது. கோவிட்-19 சிறப்பு கடனுதவி திட்டத்தின் கீழ், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் அவசரத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு உறுப்பினருக்கு குறைந்தது ரூ.5 ஆயிரமும் அதிகபட்சமாக ஒரு குழுவிற்கு ரூ.1 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. ஏற்கனவே பெற்றுள்ள கடனில் நிலுவைத் தொகை மற்றும் தற்போது பெறப்படும் தொகையும் சேர்த்து ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். கடனை திரும்ப செலுத்தும் காலம் 24 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையாகும். முதல் 6 மாதங்களுக்கு கடனை திரும்ப செலுத்த தேவையில்லை, 6 மாதம் கழித்து சம தவணைகளில் திரும்ப செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 08.05.2020 முதல் 31.10.2020 வரை 15,241 குழுக்களுக்கு ரூ.123.75 கோடியும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 31.10.2020 வரை 45,821 உறுப்பினர்களுக்கு ரூ.23 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கிகளில் 31.3.2011 அன்று ரூ.26,245.17 கோடியாக இருந்த வைப்புத்தொகை தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், 30.09.2020 அன்று ரூ.59,453 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழகம் முழுவதும் 2011 முதல் 30.09.2020 வரை அனைத்து வகைக் கடன்களாக 7,82,14,577 நபர்களுக்கு ரூ. 3,96,614 கோடி வழங்கப்பட்டுள்ளது. மாநில அளவில் 30.09.2020 வரை 7.29 லட்சம் ரூபே விவசாய கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 31.10.2020 வரை 6,567 ரூபே பற்று அட்டைகள் மற்றும் 43,038 ரூபே விவசாய கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 5,835 சங்கங்கள் ரூ.190 கோடி மதிப்பில் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, தமிழகம் முழுவதும் 772 சங்கங்கள் ரூ.95 கோடி மதிப்பிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 3 கிளைகள், 8 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடங்கள் ரூ.1.03 கோடி மதிப்பிலும் நவீன மயமாக்கப்பட்டுள்ளன. மாநில அளவில், ரூ.133 கோடி மதிப்பில் 525 புதிய அலுவலகக் கட்டடங்களும், திருவண்ணாமலை மாவட்டத்தில், மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலக கட்டிடம் ரூ.4 கோடி மதிப்பிலும், 62 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க கட்டடங்கள் ரூ.13 கோடி மதிப்பிலும் கட்டப்பட்டுள்ளன. மாநில அளவில், ரூ.17 கோடி மதிப்பில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 134 கிளைகளும், திருவண்ணாமலை மாவட்டத்தில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 6 கிளைகளும் துவக்கப்பட்டுள்ளன.

ஏழை எளிய நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில், கூட்டுறவுத் துறையின் சார்பில் இயங்கி வரும் 292 அம்மா மருந்தகங்கள் மற்றும் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் 20% தள்ளுபடி விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும், 30.09.2020 வரை ரூ.1,040 கோடி அளவிற்கும், இதில் திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 3 அம்மா மருந்தகங்கள் மற்றும் 7 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.16 கோடி அளவிற்கும் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவுத் துறையின் மூலம் செயல்படும் 79 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 02.11.2020 வரை 59,952 மெட்ரிக் டன் அளவிலான காய்கறிகள், ரூ.179 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. கொரோனா காலத்தில் தமிழகம் முழுவதும், இயங்கிவரும் நடமாடும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் ஏற்கனவே செயல்பட்டு வரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 29.03.2020 முதல் 02.11.2020 வரை 7,358 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.22 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் 2011 முதல் 30.09.2020 வரை 680 முழு நேர நியாயவிலைக் கடைகளும், 1,771 பகுதிநேர கடைகளும் என மொத்தம் 2,451 புதிய கடைகள் திறக்கப்பட்டுள்ளன, மாநிலம் முழுவதும் 1,237 முழுநேர நியாயவிலைக் கடைகளுக்கும், 744 பகுதிநேர கடைகளுக்கும் என மொத்தம் 1,981 கடைகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகளுக்கு அருகிலேயே அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் 5% வரை தள்ளுபடி விலையில் 300 வகையான பொருட்களை பெற்றுக்கொள்ளும் வகையில் அம்மா சிறு கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் துவங்க மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் உத்தரவிடப்பட்டு நாளது தேதி வரை மாநில அளவில் 858 கடைகளும், திருவண்ணாமலை மாவட்டத்தில் இதுவரை 16 கடைகளும் திறக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விதி 110-ன் கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் வைத்த கோரிக்கைகளை கருத்தில்கொண்டு, குடியிருப்புகளுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு, மாநிலம் முழுவதும் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில், 3,501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளை துவக்க உத்தரவிடப்பட்டு, 21.09.2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 212 இடங்களில் அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 25,796 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுகின்றனர்' என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**